**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2022**

--------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை | | | |
| (i) III ஆம் பந்தியில் 18.8.1 மற்றும் 18.8.3 ஆம் பிரிவுகள் | அறிவித்தல் ஒன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படாமல் பதவிகளுக்கு ஆட்சேர்க்க முடியாதிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு நியமித்தல் இரண்டு வருடங்களுக்கு மேற்பட முடியாதிருந்த போதிலும் 2013 ஆம் முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 18 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேவையில் | குறித்த சம்பள வரப்பிரசாதங்களுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களை கவர்ந்து கொள்வதற்கு போதியளவில் இல்லாதிருந்ததன் அடிப்படையில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் ஆக்கபூர்வமானதாக இல்லாதவிடத்து, நிரந்தரப் பதவியணியினர் இல்லாமை மற்றும் புதிய பீடங்கள் மற்றும் கற்கைகள் ஆரம்பிக்கும் போது தேவையான கல்விசார் மற்றும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கல்விசாரா பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளாமல் மாணவர்கள் பதிவுசெய்யப்படும் போது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ii) | III ஆம் பந்தியில் 24.2 ஆம் பிரிவு | சேவைக் கையளித்தல் அடிப்படையில் 94 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 முதல் ரூபா 100,000 வரையான மாதாந்த படியின் கீழ் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். | சில விடயத் துறைகளுக்குரிய பதவிகள் ஒதுக்கப்படாதவிடத்து கல்விசார் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் விசேட பணிப்பொறுப்புக்களுக்காக ஆளுகைச் சபை அங்கீகாரத்தின் படி சேவை கையளித்தல் அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பல்கலைக்கழ மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | XX ஆம் பந்தியில் 3.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகை, வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்தாமல் சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 4,247,254,286 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கல்விசார் உதவி உத்தியோகத்தர்கள் 54 பேர்களுக்காகவும் வருகை மற்றும் வெளிச் செல்கைகள் உறுதிப்படுத்தப்படாமல் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | இது பல்கலைக்கழக முறைமைக்கு தாக்கம் ஏற்படுத்தும் விடயமாக இருந்தமையினால் இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆலோசனைகள் வழங்கப்படல் வேண்டும். | பல்கலைக்கழ மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 965,566,887 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,938,016,934 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 972,450,047 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பல்கலைக்கழகத்தின் செலவினம் ரூபா 1,152,033,094 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு**

கடந்த ஆண்டில் இலாப விகிதம் 10.36 சதவீதமாக இருந்ததுடன் அதனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அந்த விகிதம் 21.43 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 3.08:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டில் அந்த விகிதம் 7.98:1 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ‘‘மெத்செவன நிவாசய’’ ஸ்தாபிக்கப்பட்ட 07 ஏக்கர் காணிக்காக ரூபா 74 மில்லியன் மேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் 03 ஏக்கரைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை நிறைவடைந்திருக்கவில்லை. மேலும் காணியை கைப்பற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது பொறலஸ்கமுவ காணிக்கு ரூபா 13 மில்லியன் கெஸ்வாவ பிரதேச செயலகத்திற்கும், 2013 ஆம் ஆண்டின் போது 03 காணிக்கூறுகளுக்காக ரூபா 2.5 மில்லியன் மஹரகம பிரதேச செயலாளருக்கும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்தக் காணிகளைக் கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தவறியிருந்தது. | 2023.03.24 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இராணுவத்தால் கைப்பெற்றப்பட்டுள்ள இந்தக் காணியை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்குமாறு அறிவித்து செயலாளர் பாதுகாப்பு அமைச்சிற்கு 2023.03.28 ஆந் திகதி பொது முயற்சிகள் குழுவினால் கடிதமும் விநியோகிக்கப்பட்டிருந்தது. ஹேம விமன தவட்ட கஹவத்த காணியின் உறுரிமையாளருக்கு இழப்பீடு மீளாய்வு குழுவிற்கு முறைபாடு செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விசாரணை முடிவடைந்து அறிக்கை தயாரிக்கப்ப டுகின்றது. ஹோமாகம பிரதேச செயலாளரால் கைப்பெற்றப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு 2017.07.31 ஆந் திகதி உரிமை கையளிக்கப்பட்ட கெகுணகஹவத்த மத்தேகொட காணியின் உரித்தை பதிவு செய்வதற்காக ஹோமாகம காணிப் பாதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய காணிகளைக் கையேற்று விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வெளிநாடு சென்றுள்ள கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் 41 பேர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கை இடாமையின் காரணமாக நடைமுறைகளை மீறியதன் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தொகை ரூபா 77,235,211 ஆகும். அவ்வாறே ரூபா 5,188,694 தொகை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு 05 உத்தியோகத்தர்கள் விருப்பம் தெரிவித்திருந்த போதிலும் 2022 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய தொகையில் ரூபா 4,864,336.29 தொகை 2023.05.15 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டுள்ளது. விருப்பம் தெரிவித்த ஐந்து உத்தியோகத்தர்களின் சேமிலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அறவிடவேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பாலின சமத்துவம் மற்றும் சமாந்தர / நியாயத்தன்மை தொடர்பான துறைகளின் செலவினத்திற்காக 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 2,090,357 தொகை உரிய பணிகளுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்குரிய பணிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமையினால் 2023 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்படும். | உரிய பணிகளுக்காக கிடைத்த நிதியை அந்த ஆண்டுகளின் போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தப் பெறுமதி ரூபா 29,561,377 ஆன பல்கலைக்கழகத்தின் ‘‘கெலே கடே’’ சிற்றுண்டிச் சாலையின் கட்டம் II மற்றும் III ஆக. பிரிக்கப்பட்டு 02 ஒப்பந்தங்கள் ஒரு ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தங்கள் இரண்டும் 2023 சனவரி 13 ஆம் திகதி வரையிலும் முறையே 1,261 நாட்கள் மற்றும் 1,155 நாட்களாக தாமதமடைந்திருந்த போதும் 2022 மே 06 ஆம் திகதி இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்தத்தை முடிவுறுத்துமாறும் உபவேந்தர் ஆலோசனை வழங்கியிருந்தார். இந்த இதன் செயலாற்றல் காப்புறுதியின் செல்லுபடிக்காலம் | ஒப்பந்தம் தொடர்பாக 2022.05.06 ஆந் திகதி நடைபெற்ற விஷேட செயல்முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டத்தின் போது உரிய தரப்பினர் இருவரும் அன்னியொன்னிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்திருந்ததுடன் உரிய ஒப்பந்த பெறுமதியில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தை குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு செயற்பட வேண்டியிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்தமையினால் ரூபா 1,478,069 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அளவிடைப் பத்திரப் பெறுமதியை விஞ்சி ரூபா 6,515,825 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சாத்தியவள ஆய்வினைச் செய்து செயற்திட்டத்தை செய்யும் இயலுமை தீர்மானிக்கப்படாமல் கேட்போர்கூட நிர்மாணத்திற்காக ஆலோசனைக் கட்டணம் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 5,794,676 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இந்த செயல்திட்டம் பல்கலைக்கழகத்தின் அத்தியவாசிய செயற்திட்டமாக இருந்தமையால் திறைசேரியிலிருந்து நிதி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் செயற்திட்டத்தை செய்வதற்கான இயலுமையின் பிரகாரம் திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். |